# தேவ அன்பு

**உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன். (யோ 5:42)**




மேற்கண்ட வசனத்தை ஆண்டவர் யாரை பார்த்து கூறினாரென்றால் "**இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்." (யோ 5:16)**, மேலும் **"அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்." (யோ 5:18)**.

இங்கு நாம் ஆண்டவரை குற்றப்படுத்தி, அவரை கொலை செய்யும் அளவிற்கு மூர்க்கமாய், மேற்குறிப்பிட்ட யூதர்கள் காணப்பட்டதற்கு, அவர்கள் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்ட தேவ கட்டளைகளுக்காக வைராக்கியம் பாராட்டியோ, அல்லது தேவனுக்கு சமமாக யாருமில்லை என்ற சத்தியத்திற்காகவோ, ஆண்டவரோடு போராடவில்லை. அப்படி இருந்திருப்பார்களானால் ஆண்டவருடைய வாயிலிருந்து புறப்பட்ட சத்திய வார்த்தைகள் அவர்களை சவுல், பவுலாக மாறியது போல் மாற செய்திருக்கும். உண்மையில் அவர்கள் ஒரு மாய்மாலமான வாழ்க்கையை சமுதாயத்தில் வாழ்ந்து, தங்களை தேவனுக்காக வைராக்கியம் கொண்டவர்கள் போல் காண்பித்து கொள்ளவே இப்படியாக தேவையில்லாமல் ஆண்டவரையே கொலைசெய்யும் அளவிற்கு அதிக அதிகமாய் வகை தேடினார்கள்.

**"இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது." (யோ 4:22)** என ஆண்டவரே சமாரிய பெண்ணிடம் கூறியுள்ளார். எனவே உண்மையாக தேவனுக்காக வைராக்கியம் பாராட்டுவோர், தங்களின் மூலமாய் இரட்சிப்பு மற்றவர்களுக்கு கடந்து செல்ல வேண்டும் என்று பிரயாசப்படுவார்களேயொழிய, யாரையும் கொலை செய்ய, துன்புறுத்த முற்படமாட்டார்கள். எனவே தான் தன்னை எதிர்த்த யூதர்களை குறித்து ஆண்டவர் கூறினார் "**உங்களில் தேவ அன்பு இல்லையென்று" (யோ 5:42)**, அவர்களிடம் காணப்பட்ட தெல்லாம் மாய்மாலமான முறையில் தங்களை தேவபக்தியுள்ளவர்கள் போல், மற்ற யூதர்களை காட்டிலும் தேவ வைராக்கியம் உள்ளவர்கள் போல், காண்பித்துக் கொள்வதே ஆகும். இன்றும் சபையிலும் இப்படிப்பட்ட மக்கள் காணப்படுகின்றனர். அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள், விசுவாசிகள் என்று கூறிக் கொண்டாலும் உண்மையில் அவர்களிடத்தில் தேவ அன்பு இல்லை. இன்னும் ஒருபடி மேலே சென்று பார்த்தால் சபையில் முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ ஊழியம் செய்கிறோம் என்று கூறிக் கொள்வோறிலும் சிலர் தேவ அன்பு அற்றவர்களாக இருக்கின்றனர். இவர்கள் வாழ்க்கையில் அதிகமாய் ஜெபம், உபவாசம், ஆவியில் நிரம்புதல் போன்ற காரியங்கள் காணப்பட்டாலும் உண்மையில் அவர்களிடத்தில் தேவ அன்பு இல்லை. அவர்கள் செய்வதெல்லாம் தேவனிடத்திலிருந்து ஏதோ ஒரு பிரதிபலனை எதிர்பார்த்து செய்யப்படுவதே தவிர தேவ அன்பினால் செய்யப்படுவது அல்ல.

**"ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத் 7:11)** என்று ஆண்டவரே கூறியுள்ளார். எனவே ஆண்டவர் நம் வாழ்வில் செய்வதெல்லாம் நன்மையான காரியங்களே. அவர் கரத்தை மீறி எதுவும் எவரும் நம்மை தொட முடியாது. அதே நேரத்தில் பிள்ளைகள் கேட்பதுபோல நாம் வேண்டிக் கொள்வது எல்லாவற்றையும் அவர் தமது சித்தப்படியே நமக்கு தருகிறார். அதே நேரத்தில் பிள்ளைகள் எதையாவது கண்டு அஞ்சும் நேரத்தில், பிதாவின் பாதுகாவலை, பிரசன்னத்தை, தேடி நாடுவது போல், நம் வாழ்க்கையிலும் சத்துருவாகிய பிசாசானவன் வியாதி மூலமாகவோ, அல்லது பொல்லாத மனிதரின் மூலமாகவோ, அல்லது வேறு எந்த ஒரு விதத்திலோ நம்மை பயமுறுத்த நினைக்கும் பொழுது, அப்பா பிதாவே காப்பாற்றும் என்று கேட்பது, அவர் நம் மீது அன்பு வைத்துள்ள பிதா என்பதனால்தான். ஆனால் இதைப் புரிந்துகொள்ளாதோர், சில பக்தியான காரியங்களை செய்யவில்லை, காணிக்கை போன்றவற்றை கொடுக்கவில்லை என்றால், ஆண்டவர் நம்மைத் தண்டித்து விடுவார் என்றும். அல்லது சில மாய்மாலமான காரியங்களை செய்து தேவனையே திருப்தி செய்து விடலாம் என்ற முட்டாள்தனமான எண்ணம் உள்ளவர்களே. தேவனை பிதாவாக பார்க்க மனமில்லாமல், தேவ அன்பு சற்றும் இன்றி, வெறும் பக்தியாளர்களாய் தங்களை காண்பித்துக் கொள்வர். இதில் வேதனையான காரியம் என்னவென்றால் இவர்களது மாய்மாலத்தைத் பின்பற்றி உண்மையாய் தேவனின் அன்பு கூற நினைப்பவரும் மாய்மாலமான காரியங்களை செய்ய தள்ளப்படுகின்றனர்.

இந்த தேவ அன்பு இல்லாத காரணத்தினாலேயே இன்று சபைகள் நிரம்பி வழிவதை போல் காணப்பட்டாலும், அனேகர் ஆவியில் நிறைவதை போல் காணப்பட்டாலும் ,அதிகமான காணிக்கை கொடுக்கப்பட்டாலும், பல்வேறு இடங்களில் குறிப்பாக இன்றைய இளைஞர்கள் சமூக வலைதளங்களில் தேவ வைராக்கியம் உள்ளவர்கள் போல் பாடல்கள் இயற்றி பதிவிட்டாலும், இன்னும் பல்வேறு காரியங்களை செய்தாலும் தேசத்தில் எழுப்புதல் ஏற்படவில்லை. அதற்கு மாறாக இவர்களின் செய்கைகளை பின்பற்றுவோர், குறிப்பாக இளைஞர்கள் தேவ அன்பை விட்டு உலகத்திற்குள்ளாய் சென்று தங்களைக் கெடுத்துக்கொள்கின்றனர். தேவபயம், பரிசுத்தம் எதுவுமின்றி,

வெறும் வைராக்கியம் காட்டிய யூதர்களைப் போல் இவர்கள் ஏதோ தேவனுக்காக வைராக்கியமாக செய்வது போல் இருந்தாலும், அவர்கள் மூலமாய் தேவ நாமத்திற்கு எந்தவித மகிமையும் இல்லை. காரணம் அவர்கள் தேவனுக்கே மகிமை என்று பாடினாலும், ஆடினாலும் தங்களை முன்னிறுத்தவே நினைக்கின்றனர். இதில் இன்னும் மோசமான காரியம் என்னவெனில், தேவபக்தியை ஆதாய தொழிலாக மாற்றி தங்கள் வயிற்றிற்கே ஊழியம் செய்கின்றனர். இப்படிப்பட்டவர்களை பார்த்து ஆண்டவர் கூறுகிறார் உங்களில் தேவ அன்பு இல்லை என்று.

எனவே தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிட அறியாமல், தேவ அன்பு தங்களில் இல்லாமல், வெறும் மத வைராக்கியம் பாராட்டிக் கொண்டு தங்கள் மனதில் தோன்றியவைகளை செய்து, பாவத்தைத் பற்றியோ பரிசுத்த வாழ்வை பற்றியோ கவலைப்படாமல் வயிற்றுப் பிழைப்பிற்காக வாழ்வோர் இப்படிபட்டவர்கள். எனவே உண்மையை நாம் ஆண்டவரை தேடுவோமானால், நாம் அவர்களைப் போல் மாய்மாலம் எதுவும் செய்யத் தேவை இல்லை. ஒன்றை மாத்திரம் நாம் அறிந்திருந்தால் போதும். அது அவர் நம்முடைய பிதா என்பதே. எனவே அவர் நம்மில் அன்பு கூறுகிறார், நாமும் அவரில் அன்பு கூரவேண்டும். அவருக்கு பிரியமில்லாதவற்றை தவிர்த்து அவருக்கு பிரியமானவற்றை செய்ய வேண்டும் என்பதே. அப்படி நாம் செய்யும் பொழுது நம் மூலமாய் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள், போஷிக்கப்படுவார்கள், தேவனை தங்கள் சொந்த பிதாவாக அறிந்துகொள்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் வார்த்தைக்கு கீழ்படிந்து நடப்பார்கள். அப்பொழுது பிள்ளைகள் மனமகிழ்ச்சியாய் பிதாவை சார்ந்து அன்பு கூறுவது போல, நம்முடைய அன்பையும் அவர் ஏற்றுக்கொள்வார். அதற்கான (பிள்ளைக்கான) பிரதிபலனை அவரே நமக்கு தருவார். எல்லா தீமைக்கும் நம்மை விலக்கிக் காப்பார். ஆமென், அல்லேலூயா.